30th March 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம்.

(இ) இந்த மருத்துவ மனைகளின் பணியாளர்களை அரசாங்கப் பணியில் சேர்த்துக்கொண்ட பின்புதான், அவர்களுக்கு அரசாங்க சம்பள விதப்படி சம்பளம் வழங்கப்படும். இது குறித்து இன்னும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அவர்களைப் பற்றிய குறிப்புகளெல்லாம் கீழேயிருந்து டி.எம்.எஸ். ஆபீஸுக்கு வந்து விட்டன. இதைப் பரிசீலிப்பதில் கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இன்னும் டி.எம்.எஸ். ஆபீஸிலிருந்து தகவல் வரவில்லை, வந்த பின் தான் பரிசிலிக்க வேண்டும்.

Primary Health Centre at Poonimangadu

* 532 *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU: Will the Hon. the Minister for Public Health be pleased to state with reference to the answer given to Question No. 73 placed on the Table of the House on 1st April 1965 whether the construction of Primary Health Centre buildings and staff quarters at Poonimangadu village in Thiruvalangadu Panchayat Union, in Chingleput district has been completed?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: No.

சிதம்பரம் பிச்சைக்காரர் விடுதி

* 533 **கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியம்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரத்திலுள்ள பிச்சைக்காரர்கள் விடுதியில் எத்தனை பிச்சைக்காரர்கள் இருக்கின்றார்கள்?

(இ) அவர்களுக்குத் தொழிற்பயிற்சி ஏதேனும் அளிக்கப் பட்டு வருகிறதா?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) 31.

(*b*) No. But training was imparted to the inmates in mat-weaving till January 1966.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Regarding this building at Poonimangadu, the construction of medical officers' quarters has been completed. The construction of the remaining building—hospital and staff quarters—has to be completed. The emergency provision need not be applied to it, as it is only a case of completion of an incomplete building. May I request the Government to consider this?